உ

சண்முகநாதன்.

SANMUKANATHAN.

பத்திரவிகிதம்
உள்ளூருக்கு ௵-க்கு ரூபா 1-50
வெளியூருக்கு ௵-க்கு ரூபா 2-00
தொலைவாய்ப்பகுதிக்கு
௵-க்கு 2-50.
தனிப்பிரதி சதம் 6.

மாசமிருமுறைபிரகடனமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப்படும்.

விளம்பர விகிதம்.
முதன்முறைக்கு— ரூ. ச.
ஒருகலத்துக்கு 7-50
அரைக்கலத்துக்கு 4-00
கால்கலத்துக்கு 2-60
வரி 1-க்கு 0 8
அடுத்தமுறைக்கு ஷெ அரைவாசி

மலர் ௪. யாழ்ப்பாணம், ஆனந்த ௵ ஆவணி ௴ ௧௫ உ (31-9-14.) இதழ் ௬.

உ
குகமயம்

பந்தாடு மங்கையர் செங்கயற் பாலையிற் பட்டுழலுஞ், சிந்தா குலந்தனைத் தீர்த்தருள்வாய் செய்ய வேன்முருகா, கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங், கந்தா விளங்குமரா வமராவதி காவலனே.

சங்கரன்றன் றல்வினுறுஞ் சண்முகநாதன்பெயரோ, டிங்கிதமாம் பத்திரமுமெங்ஙாளுந்—துங்கமுடன், உன்னரியநன்னிலைமை யுற்றெங்கும பல்கியிட வன்னவன்றுளே துணையாம்.

அறிவிப்பு

நமது சண்முகநாதன் விஷயமாக அனுப்பும் மணியாடர், உண்டியல், பத்திரிகை, புத்தகம் முதலியவற்றைக் கீழ்க்குறித்த விலாசத்திற்கனுப்பும்படி சந்தாநேயர்களை வேண்டுகின்றோம்.

மானேசர்
த. இளையதம்பி
சண்முகநாதன் ஆபீஸ்
நல்லூர்
யாழ்ப்பாணம்.

நூதனபதிப்பு

ஆறுமுகநாவலர் அவர்கள்
இயற்றிய
தனிப்பா மாலை.

அவர்கள் சரித்திரச் சுருக்கத்துடனும் 7÷5½ அங்குலம் பிரமாணங்கொண்ட அழகிய அவர்களது பிரதிமைப்படத்துடனும் விலை சதம் 50. (8-அணா)

கிறமபோன் சங்கீதத்திரட்டு.
கிறமபோன் வைத்திருக்கும் ஒவ்வொருவருக்கும்மிகப் பிரயோசனமானது.
விலை ரூ. 1-50.
வி, பி, தபாற் செலவுகள் பிரத்தியேகம்.
10-பிரதிகள் எடுப்போர்க்கு ஒன்று கழிவாகக் கொடுக்கப்படும்.

C. VELAUTHAN.
NO 38 NEW CHETTY STREET
COLOMBO.

கியாத நாதமணி

இதனைணக்கவரும் இலட்சணம் வாய்ந்தன்னது அமெரிக்கன் மணியை மயக்குமினிய [illegible] முடையது ஆங்கிலேயர் முதலிய பலராலுமடித்துப் பரீட்சித்து மகிழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது ஏனையவிடங்களிற் பெறத்தகும் விலைக்குக் குறைத்தே கொடுக்கத்தக்கது சாதாரண அளவுள்ள மணிகள் உடனே கொடுக்கத்தக்கதாக எப்பொழுதும் எங்களிடத்திருக்கின்றது

ஆ. சிவக்கொழுந்து
மனேஜர்
எஸ். செல்லப்பா அன்ஸன்ஸ்
நல்லூர் யாழ்ப்பாணம்.

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

காஷ்மீர பட்டுகளென்ற காசிபட்டுநிலுகள்
திருப்தியில்லாத சரகுகளைத்
திரும்பப் பெற்றுக்கொள்வோம

பீதாம்பரபட்டு சேலைகள்.

(1) ௧௪ முழம் நீளம், ௨இ முழம் அகலம். விளிம்பும் முந்தியும் சரிகை. பூவேலைகள் உடல் சாதா. சேலை ௧-க்கு ரூபா ௨0 முதல் ௩0 வரை,

(௨) ௧௪ முழம் நீளம், ௨இ முழம் அகலம். மேலேகண்டபடி விளிம்பு முந்தி வேலைகளும்உடலிலும சரிகை புட்டா போட்டது. சேலை ௧-க்கு விலை ரூபா ௨௫ முதல ௩௪, ௧00 வரை.

மதனப்பூர் சேலைகள்.

(௧) ௧௪ முழம் ௨இ அகலம் விளிம்புமுந்தி சரிகைவேலைகள் உடல சாதா உருப்படி ௧-க்கு விலை ரூபா ௨0 முதல ௩0 வரை, உடல புட்டா சேலை உருப்படி ௧-க்கு விலை ரூபா ௨௫ முதல ௩0, ௧00 வரை,

(௨) வாஸ்கட் சேலைகள் ௧௪ முழம் ௨இ அகலம் பட்டினுலேயே உடலில பட்டு பூவேலைசெய்தது. விளிம்பு சருகை வேலைமுந்தியில பிரகாசமான ஜாதனப்பு முந்தி சேலை ௧-க்கு விலை ரூபா ௨௫ முதல ௩0 வரை.

பீதாம்பர அல்லது மதனப்பூர் ரவிக்கை.

(௧) உடலசாதா விளிம்புமுந்தி ஜரிகை வேலை யுள்ளது ரவிக்கை ௧-க்கு ரூபா ௨ முதல ௧0 வரை.

(௨) உடலிலும் ஜரிகையினுல பூக்கள் புட்டா போட்டது. ரவிக்கை ௧-க்கு ௨-௮-0 முதல ௧௫ வரை.

மதனப்பூர் பட்டு தாவணிகள்.

மேற்படி ௬, ௮, ௧0, ௧௨ முழம் நீளம் உள்ளது. உடலிலும் ஜரிகையினுல பூக்கள் புட்டாக்கள் போட்டது. உருப்படி ௧-க்கு ரூபா ௧௨ முதல ௧௫, ௨0, ௨௫, ௩0 வரை.

துப்பட்டாக்கள்.

பீதாம்பரம் அல்லது மதனப்புரம்.

௬ முழம் நீளம் ௨இ முழம் அகலம் உடல சாதா விளிம்பு முந்தி ஜரிகைவேலைகள் உருப்படி ௧-க்கு ரூபா ௮ முதல ௨௫ வரை.

மேலேகண்டபடி ௬ முழம் நீளம் ௨ முழம் அகலம் உடலிலும ஜரிகை பூக்கள் புட்டாக்கள் போட்டது. துப்பட்டா ௧-க்கு ரூபா ௯ முதல ௧0, ௧௨, ௧௫, ௨௫, ௩0 வரை.

சவுக்கங்கள்.

(௧) ௨இ முழம் நீளம் ௨இ முழம் அகலம் சுற்றிலும் விளிம்பு முந்திகளில ஜரிகை பூவேலைகள் நாலுமூலையிலும் சரிகை மாங்காய் மத்தியிலும் சரிகையால கமலம். சவுக்கம் ௧-க்கு ரூபா ௫ முதல ௧௫ வரை.

(௨) ஷெ அகலம் ஷெ நீளம் உடலிலும் சரிகையினுல பூக்கள் புட்டா போட்டது. உருப்படி ௧-க்கு எ முதல ௧௫ வரை.

(௩) ௧இ — ௧இ முழம் விளிம்புமுந்தி சரிகை நாலுமூலையிலும் மாங்காய், உடல சாதா உருப்படி ௧-க்கு ரூபா ௨-௮-0 முதல ௪ வரை.

(௪) ஷெ நீளம் மேற்படி அகலம் உடலிலும் சரிகை புட்டாக்கள் உருப்படி ௧-க்கு ரூபா ௩ முதல ௫ வரை

ஜரிகை யில்லாத பட்டுச் சேலைகள்.

உருத்திராக்ஷக்கரை பட்டக்கரை போட்ட சேலைகள் வெள்ளை, சிவப்பு, மஞ்சள், பச்சை முதலிய எந்த நிறத்திலும் கிடைக்கும் ௧௪ முழம் சேலை ௧-க்கு ரூபா ௯ முதல ௨௫ வரை,

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள். கோயம்புத்தூர் சேலம் வேட்டிகள் மாதிரிக்கம்பி, ருத்திராக்ஷகம்பி, சரிகைக்கம்பிபோட்டவை

முழம்	அகலம்	ரூபா	முதல	வரை
௪	௨	௪இ	,,	௭
௫	௨இ	௭	,,	௯
௬	௩	௧0	,,	௧௨
௭	௨இ	௮	,,	௧௨
௭	௩	௧0	,,	௧௪
௮	௩	௧௨	,,	௧௮
௯	௩	௧௪	,,	௨0
௧0	௩	௧இ	,,	௨௨

முக்காடுகள்.

முக்காடுகள் [illegible] வெள்ளை [illegible] செய்த [illegible] அழகும் சௌகரியமும [illegible] பத்திரங்கள் ௩௨ உள்ள [illegible] ௧-க்கு ரூபா ௩ பெரிய [illegible]

உடலைமூடுங்கள்
உருத்திராக்ஷ [illegible] ஜபமாலைகள்
பரிசுத்தமானது.

௧0-அ ௨ [illegible] ௧-க்கு ௯ அணா முதல் ரூபா ௩௨ வரை. [illegible] அதிகப்படியானது போல [illegible] முகக்கண்டிகள் ௩௩ உள்ளது ௧-க்கு ரூபா ௧ முதல் ௧0 வரை. ௫ முகக்கண்டி ௩௨ உள்ளது கண்டி ௧-க்கு அணா ௫ முதல் ரூபா ௫ வரை விலை அதிகம் [illegible] பணிகள் [illegible] இருக்குது,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு [illegible] காசி [illegible] கம்பளி [illegible] செய்த உறுதியும், சௌகர்யம், சேர்க்கியுமான கம்பளிப் போர்வைகளை, ௬ முழம் நீளம ௩ முழம் அகலம் சிவப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. உருப்படி ௧-க்கு ரூபா ௫-௮-0 ஷெ சிறிசு ௧-க்கு ௪-௮-0 [illegible] வர்ண [illegible] ர்வை ௧-க்கு ௩-௮-0 தபால் செலவு பிரத்தியேகம்

காசி வயிரவர் கம்பெனி.

முதல் கெட்பா	௩-க்கு	,,	...	௯ 0 0
௨-வது	,,	,,	...	௨ ௮0
௩-வது	,,	,,	...	௨ ௫0
௪-வது	,,	,,		0 ௬ 0

கஸ்தூரி

சுத்தமான கஸ்தூரி! சுத்தமான கஸ்தூரி! நம்மிடம் [illegible] விலை தோலா ௧-க்கு ரூபா ௧௫

,,	௨	,,	,,	,,	௩0
,,	௩	,,	,,	,,	௪0
,,	௪	,,	,,	,,	௬௫
,,	௫	,,	,,	,,	௯௨

[illegible]

குங்குமப்பூ [illegible] ௧-க்கு ரூபா ௨ முதல் ௫ வரை

[illegible] சாமான்கள்

[illegible] டப்பி:—கோழிமுட்டை போன்ற [illegible] உருப்படி ௧-க்கு ரூபா ௨ முதல் ௫ வரை.

[illegible]:—உருப்படி ௧-க்கு ரூபா ௩ முதல் ௮ வரை

[illegible]:—மற்றும் [illegible] சகல தக்க சாமான்களும் அனுப்பப்படும்.

விலாசம்:

மானேஜர்
பட்டு பீதாம்பர கம்பெனி,
தாராநகர் தெரு காசி.

சண்முகநாதன்.

யாழ்ப்பாணம் ஆனந்த௵ ஆவணி௴ ௧௫ உ

கந்தபுராணம்.

(*)

இது சிவபுராணம் பத்தனுள் ஒன்றாயும் ஒருலக்ஷங்கிரந்தமுடைய ஆறு கண்டங்களை யடக்கிய ஆறுசங்கிதைகளை யுடையதாயும இலவும் வடமொழிக் காந்தபுராணத்துள் பன்னிரண்டு கண்டங்களாற் புனையப்பட்ட முப்பதினுயிரங்கிரந்தமுடைய சங்கரசங்கிதையின் முற்கண்டமாயும் பதின்மூவாயிரங்கிரந்தமுடையதாயும சம்பவகாண்டம், அசுரகாண்டம், மகேந்திரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என ஏழுகாண்டங்களை யுடைத்தாயும் உள்ள சிவரகசியத்தின்வழியே நந் தமிழ்நாடு செய்த பெருந்தவப்பயனுற் கலியுகவரதராகிய சுப்பிரமணியப்பெருமானின் வரப்பிரசாதத்துடன் காஞ்சிபுரத்திற் றிருவவதாரஞ்செய்தருளிய கச்சியப்பசிவாசாரியசுவாமிகளால் அத்தியற்புதலக்ஷியமதுரச் சுந்தரச் செந்தமிழ்மொழியில் அருளிச் செய்யப்பட்டது. சிவரகசியத்தின்முதலாறுகாண்டங்களையுமே கச்சியப்பசிவாசாரியசுவாமிகள கந்தபுராண மெனப் பெயர் தந்து திருவாய்மலர்ந்தருளினுர். பிற்காண்டமாகிய உபதேசகாண்டத்தைக் கோனேரியப்பமுதலியார் தமிழில் அருளிச்செய்தனர்.

நான்குயுகங்களுள்ளும் கீழ்ப்பட்டதாயும், தெய்வவருள் மறைவுற்றதாயும், இழிஞர்க்கு நற்காலமாயு முள்ள இக்கலியுகத்திலே மனமொழிமெய்களாற் றுமைவழிபடும் மெய்யன்பர்கள் வேண்டுவ வேண்டி யாங்குதவி வெளிநின்று பேரருள் பாலிக்கும் விசேட மூர்த்தமாகிய சுப்பிரமணியப்பெருமானையே பாட்டுடைத்தலைவராக வுடைமையினுலும், ஏனை யிதிகாசபுராணுதிகளைப் போல மனுடரின் வேண்டுகோளுக்கிணைந்து பாடப்படாது கலியுகவரதரும் பாட்டுடைத்தலைவருமாகிய சுப்பிரமணியப் பெருமானின் வேண்டுகோளின்படியே பாடப்பெற்றமையானும், "திகடசக்கரச் செம்முக மைந்துளான்" என்று அப்பெருமானுலேயே யடியெடுத்துக்கொடுக்கப் பட்டமையாலும், இன்னும் பாடிமுடிவுபெறும்வரையும் அவராற் பரிசோதிக்கப்பட்டமையாலும், அரங்கேற்றுங்காலை அப்பெருமானே மானுடரூபந்துடனெழுந்தருளிவந்து "திகடசக்கரம்" எனப் புணர்ந்ததற்கு விதியறியாது மயங்கிய அவைவருடைய மயக்கத்தையும் விரசோழியந் தந்தறுத்தமையாலும், தருமார்த்த காமமோக்ஷமென்னுஞ் சதுர்விதபுருஷார்த்தங்களையும வேதாகமங்கட்குமாறுபாடின்றிக் கரதலாமலகம்போற் றெள்ளிதி னுணர்த்தலானும், தற்காலத்துத் தமிழில்வழங்கும் புராணங்கள் பலவற்றுள்ளும் இதனை யுயர்வுடைத்தென்றுகூறல் தகும்.

இப்புராணம்சுப்பிரமணியப்பெருமானுடைய அருண்மொழிப்படியேபாடப்பெற்றதென்பதை அவையடக்கத்து "செந்தமிட்கு வரம்பெனச்செப்பிய—முந்துகாசிபன் முற்றுணர்மேலவர்—சந்தனெறிமை

கதையினை நான்முறை — தந்திடென்னத் தமியனியம்புகேன்.,, என்னும் செய்யுளை வலியுறுத்தும் ‘‘சுப்பிரமணியப் பெருமானுடைய அருண்மொழிப்படியே கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணத்தைப் பாடியருளினர்,, என்னுஞ்சரித்திரத்தொடர்பை நோக்காதுமேற் போந்தசெய்யுளில் ‘‘காஞ்சியின் முற்றுணர்மேலவர்,, என்பதற்குச்சிலர் ‘‘காஞ்சிபுரத்தில்வசிக்கும் மூதறிஞராயினோர்,, எனப்பொருள் கூறிமயங்குப.

இக்கந்தபுராணம் கச்சியப்பசிவாசாரிய சுவாமிகளால் அரங்கேற்றப்பட்டுச்சுமார். ககூஎ. வருடங்களாயின. இதனை ‘‘வேதமொடு வேதாங்கபயின் றவல்லோன் விரிந்தசிவாகம முணர்ந்துமேன்மை பூண்டோன், பேர்தகிறை சிவமறையோன் காஞ்சிவாழும் புனிதமிகு கச்சியப்பகுரவனேன், வாதமுறுபுலவர்குழா மகிழ்ந்து போற்ற மதிமலிமாடம்புடைசூழ்குமரகோட்டத், தேதமறு சகாத்த மெழுநூற்றின் மேலாயிலகு கந்தபுராண மரங்கேற்றினனே.,, என்னும் அபியுக்தர்வாக்கே வலியுறுத்தும்.

சிவபெருமான் தம்மிடத்தினின்றுந் தோற்றுவித்தவருள் மூர்த்தங்களுட்டற்காலத்துப் பிரபலமாய் இஷ்டகாமியங்களையுதவும் சுப்பிரமணியப் பெருமானின் திருவிளையாடலை நன்குணர்ந்து மியலபிற்றுதலான் இக்கந்தபுராணத்தை விதிப்படி யோதுவோரும், ஓதுவிப்போரும், சிரத்தையுடன் சிரவணஞ் செய்வோரும் இம்மையிற்றும்வேண்டிய போகங்களனைத்தையும் அநுபவித்து மறுமையில் முத்தியின்பத்தையும் அடைவாக்களென்பதிற்றடையில்லை.

ஐரோப்பா யுத்தத்தைப்பற்றி

ஒரு வங்காளியின் சோஸ்யம்

வங்காளத்திலுள்ள பவானிப்பூர் வாஸியான ஜோதிஷ் சந்திர காடக்என்பவர் எழுதியுள்ள ஜோஸ்யத்தின் சுருக்கம்:—

கெட்டகிரகங்கள் ஒன்றுசேர்வதால் அவற்றிற்குச் சக்திமிருந்து மற்றக் கிரகங்களுக்குச் சக்தி குன்றும்பொழுது யுத்தம் நேரிடுமென்பது நமதுசோதிஷ ஸாஸ்திரத்தின் துணிபு; உலகசரித்திரமும் இதனையுறுதிப்படுத்துகின்றது. சிலமாசங்களாகச் சனிக்குச் சக்திமிருந்து வருகின்றது. ராகுசென்ற ஜூலைமாதம் 28 ந் தேதி தனது முழுச்சக்தியும்பெற்று உச்சநிலையை அடைந்திருக்கின்றது. அது செட்டம்பர் மாதம் முடிவுவரை அவ்வாறிருக்கும். ராகுஇன்னும் சிலமாதங்களில் தன்னிலைமாறுவதாலும், சனி செட்டம்பர் முதல தேதியில் மகரராசியில் பிரவேசிப்பதாலும், இந்தயுத்தம் மிகவும் நீடிக்காது. இதற்குள் ஜெர்மனிக்குப் பலமானதோல்வியேற்படும் ஜோஸ்ய விவரங்கள்.

ஆஸ்த்ரியா

ஆஸ்திரியாவுக்கு மிகுந்த சேதங்களுண்டாகும். அது லக்ஷியும் பெருமையும் பெரிதுங்குன்றி விரைவில் வலலரசுகளுள் ஒன்றாக மதிக்கக்கூடாத தாழ்ந்த நிலையையடைந்துவிடும். சனி அதற்கு விரோதியாயிருக்கின்றது.

பிரான்ஸ்.

பிரான்ஸ் பிரதமத்தில் சிறிதுகஷ்டமடையும்; ஆனால் பின்தன்பெருமை குன்றுவாறு அதனைநிலைநிறுத்தும். அதற்குச் செவ்வாயால் ஏற்படுமே தோஷங்கள் ஆகஸ்டுமாதம் 11 ந் தேதியுடன் முடிவாகும் ஆகஸ்டுமாதம் 17 ந் தேதி சூரியன் சிம்ஹராஸியில் பிரவேசிக்கும்பொழுது பிரான்ஸ் பகைவர்கட்கு பயங்கரமாக விருக்கும். பிரான்சுக்கு அவ்வப்போது நேரும்கேடுகளுக்கு ராகுவின்தோஷமே காரணமாகும்

பெல்ஜியம்

பெல்ஜியம் பிரதமத்திலும் மத்தியிலும்சிறிது கஷ்டமடையும்; ஆனால் அதன கஷ்டங்கள் யுத்தம்முடிவான சிலகாலத்திற்குள் சரிப்பட்டுப்போம். இறுதியில்பெல்ஜியம்வெற்றிபெறும். இப்பொழுது பெல்ஜியத்தை யாட்சிபுரியும் புதன்தன் பக்கத்திலுள்ள வேறொரு அநுகூலமான கிரகத்தின்பெருஞ்சக்தியைப் பெறுகின்றது. சுக்ரனின்பார்வை அதற்குமிகுந்த அநுகூலமுள்ளதா யிருப்பதுடன் அதற்குவரும் அநேகபெருங் கேடுகளினின்றும அதனைப்பாதுகாக்கும்.

ஜெர்மனி.

ஊனு என்னும்கிரகம் இப்பொழுது ஜெர்மனியை ஆட்சிபுரிகின்றது. அஃது அதனை அநேக மடத்தனமான யோசனைகட்குட்படுத்துவதுடன் மனோராஜ்யமான எண்ணங்களையு மூண்டுபண்ணும். அதன் ஆதிக்கியம் சொற்பகாலத்திற் குரியதன்று அநேகமாய் நிலைத்த தன்மை யுடையது. ஜெர்மனி இங்கிலந்தின் மீதுயுத்தம் தொடங்கியபொழுது சனி ஊனுவைப்பார்த்துக்கொண்டிருந்தது அதனால் அதற்கேற்படும் நஷ்டங்கள் தெளிவாகத் தெரிகின்றன மிகச்சக்தியுள்ள ராகுவும் அதற்கு விரோதியாக விருக்கிறது அதனால்ஜெர்மனி தானே சமாதானத்திற்கு முயற்சிக்கநேரிடும். பின்வருந் தேதிகளில் பிரமாதமான சண்டைகள ஏற்படும்பொழுது ஜெர்மனிக்குப் பெருத்த நஷ்டங்களும் பெருந்தோல்விகளும் ஏற்படுதல்கூடும்.

இங்கிலாந்து.

இப்பொழுது இங்கிலாந்தை ஆட்சிபுரியுங்கிரகம் புதனுடன் சேர்ந்திருப்பதால் மிகவும் சக்திபொருந்தியதாயிருக்கிறது அதனால்சிறுதோல்விகளைத் தவிரப் பொதுவில் இங்கிலாந்திற்கு வெற்றியேகிடைத்துவரும். அதனையாட்சிபுரியும் கிரகம் ஆகஸ்டு மாதம் 12 ந் தேதிமுதல், மிகச்சக்திவாய்ந்த பிரகஸ்பதியுடன் சேர்கின்றது. அதுமுதல் இங்கிலாந்தின் பராக்ரமம்பகைவர்களுக்கு மிகுதியாகத்தெரியவரும். இங்கிலாந்தைக் காத்துவரும் கிரகம் செப்டெம்பர்முதல் தேதியில் மகரராசியில் தனதுயதார்த்தஸ்தானத்தையடையும் பொழுது இங்கிலாந்து தனதுசக்தியும் பராக்கிரமமும்பெரிதும்தோன்ற என்றுமில்லாத பெருங்கீர்த்தியுடன் விளங்கும். ட்ரபால்கர்ச் சண்டையில் இங்கிலீஷ்காரருக்கு வெற்றியேற்பட்ட பொழுது, சனி மிகுந்தசக்திபொருந்தியதாயும் இங்கிலாந்திற்கு அநுகூலமுடையதாயும் துலாராசியில் தனது உன்னதஸ்தானத்தையடைய மிகநெருங்கியதாயுமிருந்தது. வாட்டர்லூவில் நடந்த சண்டையில் பெரிய வெற்றி யேற்பட்ட பொழுது சனி இங்கிலாந்திற்குமிக அநுகூலமுள்ளதாய் மகரராசியில் தனதுவீட்டிலிருந்தது. இப்பொழுதும் சனி அவ்வாறே இஙகிலாந்திற்கு மிக அநுகூலமுள்ளதாய்ச் செப்டெம்பர் முதல் தேதியில் மகரராசியையடைவதாயிருக்கிறது. அப்பொழுது இஙகிலாந்து எத்தகையபகைவரையும்வென்று, தான்வெல்லக்கூடாத நிலைமையிலிருப்பது வெளியாகும். முக்கியமான பெருஞ்சண்டைகள் நேரிடும் தேதிகளும் இஙகிலீஷ்காரருக்கு வெற்றியுண்டாகும்.

இந்தியா

இந்தியாவில் எவ்விதக்குழப்பமு மின்றிச் சமாதானமே பரவியிருக்கும். பிரகஸ்பதி பிரவேசிப்பதால் ஒருசிறிதும் குழப்பமுண்டாகாது சுக்கிரனின் பார்வை வேறுவழிகளால் எதிர்ப்பார்க்கப்பட்ட கஷ்டங்களையும் வாராவாறு தடுக்கும்.

லோகோபகாரி.

யுத்ததந்திகள்.

முழுகிப்போன ஆஸ்ட்ரியக் சப்பல் உ0க-பேர் மாண்டனர்:—லண்டன் கஅ ஓர் ஆஸ்ட்ரியக் க்ருஸர்க் கப்பல் மூழ்கிப்போயினமையின், உ0க-பேர் கடலுக் கிரையாயினர்; ௬0க-பேர் காப்பாற்றப் பட்டனர்.

(ஷை ஆஸ்ட்ரியககப்பல் ககூ-ந் தேதி காலை புறுவா கன்னுமிடத்திற் கருகே பிரஞ்சுக் கடற்படையால் முழுகமாறுசெய்யப்பட்டது)

ஜெர்மன்கொடி—பாரிஸ் கக. பிரஞ்சுக்காரர் பிடித்த ஜெர்மன்கொடி பிரஞ்சு யுத்த மந்திரியாபீசில கட்டப்பட்டது; பின் யுத்த சாமான்கள் வைக்கப்படும் அரண்மனையில் வைககப்பட்டது

ஜெர்மனியர் ப்ரஸல்ஸைக் கைப்பற்றினர்—லண்டன் உக ஜெர்மனியர் (பெல்ஜியத்தின் தலைநகராகிய) ப்ரஸல்ஸை எவ்விதச்சண்டையுமின்றி நேற்றுப்பிடித்துவிட்டனர் (பெல்ஜியர் ஒருகாரணமும பற்றிப் பிரஸல்ஸில் ஜேர்மனியரைப் பிரவேசிக்க வொட்டாது தடை செய்யவில்லை

ருஷியரின் வெற்றி ஒரு பட்டணம பிடிக்கப்பட்டது—லண்டன் உக மூனுநாள் சண்டைசெய்தபின் ருஷியக்கள் கிழ்ப்பிரஷியாவில் உ0—மைல் தூரம உள்ளேபுகுந்து லிக் என்றுமிடத்தைத் தமவசப்படுத்திக்கொண்டனர்

பிராஞ்சின் வெற்றி உக பீரங்கிகள் பிடிக்கப்பட்டன—லண்டன் உக ஓர் ஆல்ஸேஸ் மகாணத்தில் முல்லாஸனுக்கும ஆல்ட்கிர்கருக்கும இடையில் நடந்தசண்டையில் பிரஞ்சுத் துருப்புகள் வெற்றிபெற்றன, அவை உச-ஜேர்மன் பீரங்கிகளைப் பிடித்துக்கொண்டன ஜேர்மனியர் ரைன் நதியில் ஓடி விட்டனர்

ஜெர்மனியும் பிரேஸிலும். பிரேஸிலின்மாஜிப் பிரெஸிடெண்டைக் கொடுமையாக நடத்திய விஷயம்:—லண்டன் கஅ. பிரேசில்-ஸாலோ போலோ மாகாணத்தின் மாஜிப்பிரஸிடெண்டையும் அவர் மனைவியையும் ஜெர்மன் ஸோல்ஜர்கள் துப்பாக்கியால கொடுமையாக அடித்து ஸ்விஸ் எல்லையிற் போட்டுவிட்டதற்குக் காரணம் சொல்லவேண்டுமென்று ஜெர்மனியைக் கேட்டிருப்பதுடன் அதிற் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்றும் கேட்டிருக்கிறது.

லீஜின் அபாயநிலை—லண்டன்-கஅ.

பெல்ஜியத்தின் முக்கிய பட்டணமான லீஜ் நகரத்திலுள்ள கோட்டைகள் ஜெர்மனியர்வசம் அகப்பட்டுவிட்டன வென்று வதந்திகளுண்டாகின்றன. ஆனால் அவ்விஷயம் நிச்சயமாகத் தெரியவில்லை அதைவிட முக்கியமான நாமூர் என்னுமிடம் இன்னும பகைவர் வசம அகப்படவில்லை

ஒரு ஜெர்மன் ஆகாயவிமானி வெடிக்குண்டுகளை வீசினார்—லண்டன்-ககூ-பிரஞ்சுக்கொடியுடன் பறந்துகொண்டிருந்த ஒருஜெர்மன் ஆகாயவிமானி லூனவில்லி யென்னும பிரஞ்சுப்பட்டணத்தில் மூன்றுவெடிக்குண்டுகளை யெறிந்துவிட்டார் அதனால்சிறிதுசேதம நேர்ந்தது.

புதியசேனை—லண்டன்-கஎ. லார்டு கிச்னர் சேர்க்கும் சேனையில் இதுவரை ஐமபதினாயிரம்பேர் சேர்ந்திருக்கின்றனர். சென்ற வாரத்தில் மாத்திரம் பதினாயிரம் பேர் சேர்ந்திருக்கின்றனர்.

ஜெர்மனியின் யுத்தகொள்ளை—சென்ற இருபத்தொராந்தேதி லண்டனில் பிரசல்ஸ்குடிகள் எண்பதுலட்சம்பவுண்டு யுத்தக்கட்டணமாகக்கொடுக்கவேண்டுமென்று ஜர்மன்கவர்ண்மெண்ட் வரிவிதித்திருக்கின்றது. லீஸ்மாகாணத்தாரும் இருபத்தைந்து லட்சம்பவுண்டுயுத்தக்கட்டணமாகக்கொடுக்கவேண்டுமென்று வரிவிதித்துத்தொகையைவசூலித்துவருகின்றனர்-யுத்ததில்ஜேமனிதோற்றவிடமாயின் இப்போதுஜர்மனிஅநியாயமாகப் பெல்ஜியரிடம் வாங்குந்தொகையை மீட்டுமவட்டியுடன் பெல்ஜியத்திற்குக் கொடுக்கவேண்டிவரும்,

ருஷிய ஆகாயவிமானங்கள்—லண்டன் உக-ந்தேதி கிழ்ப்பிரஷியாவில் ருஷிய ஆகாயவிமானங்கள் சென்று ராணுவக்கட்டடங்களின்மீது வெடிக்குண்டுகளெறிந்தன

ப்ரஸல்ஸ்க்குள் ஜெர்மனியர் பிரவேசித்தவிதம—பெல்ஜியரை அவமானஞ்செய்தமை லண்டன் உஉ ஜெர்மனியர் ப்ரஸல்ஸ்வாசிகள் வாய்திறந்தவண்ணம் வேடிக்கைபார்த்துக்கொண்டுநின்றார்கள் இரண்டு பெல்ஜிய ராணுவஉத்தியோகஸ்தர்களைக் கைவிலங்கிட்டுக் குதிரைமீதுசென்ற ஒரு ஜெர்மன் ஸோல்ஜரின் அங்கபடியில வாராலபிணித்துக்கொண்டு போவதையும், ஒருபெல்ஜியச்சேனைத்தலைவரின் உடையைப்போட்ட ஒருகழுதை இழுத்துக்கொண்டுபோவதையும பார்த்தவுடன் ஜனங்களுக்கு மிகுந்த ஆத்திரமும் கோபமும பொங்கின

ஆகாயவிமானத்திருந்து வெடிக்குண்டெறிதல—லண்டன் உஉ ஒருபெரிய ஆகாயவிமானம் இன்றிரவு ஜெர்மன்குதிரைப்பட்டாள மிருக்குமிடத்திற் சென்று வெடிக்குண்டுகளை யெறிந்தது அதனால ஜெர்மன்படை கலககமடைந்தது ஜெர்மன் படைவீரர் ஆகாயவிமானத்தைநோக்கிச் சுட்டனர். ஆனால அதுசேதமடையாமல பிரஞ்சுப்படையுடன் சேர்ந்துகொண்டது.

பிரஞ்சுக்கவர்மெண்டாரின் உறுதிமொழி—லண்டன் உஉ பெல்ஜியம தேசத்தார் படும் கஷ்டநஷ்டங்களுக்கு அநுதாபப்படுகின்றோ மென்றும் பெல்ஜியத்தில ஒருஜெர்மன்கூட இல்லாமற் செய்து ஜேர்மனியரை யொழித்துவிடுவோமென்றும் பிரஞ்சுக்கவர்மெண்டார் உறுதிமொழி கூறியிருக்கின்றனர்

லாட்னிட்சாயுத்தம செர்வியரின்வெற்றி—லண்டன் உஉ ரோம்-லாட்னிச்சாவிற் கருகேநடந்த நாலுநாள் யுத்தத்தில் செர்வியர்பெரியவெற்றிபெற்றனர். ஆஸ்டிரியர் முற்றிலும் தோல்வியடைந்தனா டிரினுநதியைக் கடந்த ஆஸ்டிரியப்படையின் இரண்டுபிரிவுகளும் சேதமடைந்தன புறமுதுகிட்டு டிரினுநதிப்பாலத்தைநோக்கி ஓடிய ஆஸ்டிரியத்துருப்புகளைச் செர்வியத்துருப்புகள் தாரத்திச்சென்றன, இந்தயுத்தத்தில இரண்டுகட்சியாருக்கும் பெருஞ்சேதமுண்டாயது, செர்வியர் 40 பீரங்கிகளையும் அனேகஆயுதங்களையும் குதிரைகளையும் பிடித்துக் கொண்டனர், ஆயிரககணக்கான ஆஸ்டிரியர் கைதி செய்யப்பட்டனர்

செர்மனிய ஆகாயவிமானம்—லண்டன் உஉ ஒருசெர்மனிய ஆகாய விமானம் ஆலந்தில நரந்தியை நோக்கிச்சென்றது, அதனைநோக்கி டச்சசோல்ஜர்கள் சுட்டனர், அதுசேதமடையாமல செர்மனியின் எல்லைப்புறமாகப் போய்விட்டது, வேறொருசெர்மனிய ஆகாயவிமானம் பாஸ்டிரிச்ட நகரத்தில சலாவிககொண்டிருந்தது,

செர்மானியரின் கஷ்டம் சிம்லா உஉ—பிரசல்ஸை பெலஜியர் பகைவருககு விட்டுவிட்டமையின் செர்மானியப்படை செர்மனியருககு போககுவரவுசெய்ய வழியிலலாது கலககங்கொண்டிருககின்றது, பிரசலசிலிருந்து சர்மனிககுச்செலல இரண்டு றயிலமார்ககங்களதா மிருககின்றது, ஒன்று லீஸ்மார்ககம்; மற்றொன்று மாஸ்டிரிச்ட் றயிலவேமார்ககம். மாஸ்டிரிச்ட் றயிலவே மார்ககமாகச் செலவது ஆலண்டின் பகைமையைகோரியதாகும், இவ்விரண்டுமார்ககங்களிற் செலவது கூடாமையின், சர்மனிதன் போககுவரவுகளைத் தரைமார்ககமாகத் தான்வைத்துககொள்ளுதல வேண்டும் இம்மார்ககத்திலுல எலலாவியவாரங்களும் காலகிரமத்தில நடைபெறுவது கூடாதவாம்

நிருப விதாநங்கள்

——(0)——

நிருபமெழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒருபக்கத்திலே நல்ல மையினு லெழுதியனுப்புதல் வேண்டும்.

தொடர்பெழுத்துக்களா லெழுதலாகாது. தனித்தனிவரிகளாய் நெருங்காது எளிதில் விளங்கும்படியாக எழுதுதல்வேண்டும.

எவரொருவரையாவது அநாவசியகமாய்ப் புகழ்ந்தாவது, இகழ்ந்தாவது வரையுங் கடிதங்க ளிடம்பெற மாட்டா.

சிலேடைகளுடன் ஒருவரைத் தாக்கியாவது, தூஷித்தாவது எழுதாது அறிவுவிருத்திக்குரிய நல்விஷயங்கள் சுருக்கமா யெழுதியனுப்புதல்வேண்டும்.

ஊர், பேர், முதலிய விலாசங்களில்லாது அனுப்பப்படும் கடிதங்கள் பிரசுரிக்கப்பட மாட்டா.

பிரசுரிக்கப்படத் தகாதவைகளாகக் காணப்படுங் கடிதங்களை திருப்பி யனுப்பப்பட மாட்டாது.

இயன்ற வரையிற் தேசக்ஷேமத்திற்கும், அறிவுவிருத்திக்குமுரிய நல்விஷயங்களை எழுதியனுப்பி நன்மைபயக்குமாறு நண்பர்களைமிகுதியும் வேண்டிக்கொள்ளுகின்றோம.

விஞ்ஞாபனம்.

——(:o:)——

நமது பத்திரிகாபிமானிகளே!

ஸ்ரீ சரவணப்பெருமான் திருவருளால் எங்கள் சண்முகநாதன் தொடங்கி வருடம் மூன்று பூர்த்தியாகி நலாவது வருடம் தொடங்கி இலக்கம ஆறும் விட்டது. இன்னும் நமது கையொப்பாபிமானிகளிற் சிலர் சென்ற வருடங்களின் சந்தாத் தொகையைச் செலுத்த மறந்துவிட்டனர்போலும்! இனியாவது, நமது நேயர்கள் சென்ற வருடங்களின் சந்தாத் தொகையைச் செலுத்தாதவர்கள் தங்கள் தங்களுடைய பாக்கியைச் செலுத்தியும் ஏனையோரும் இவ்வருடச் சந்தாத் தொகையைச் செலுத்துவதோடு சந்தாதாரர்களைச்சேர்த்தும் விஷயதானஞ்செய்தும் ‘சண்முகநாதன்’ தூக்குருவண்ணம் ஊக்கத்துடன் ஆக்கப்படுத்துமாறு வேண்டுகின்றேம்.

மானேசர்
‘‘சண்முகநாதன்’’
நல்லூர்
யாழ்ப்பாணம்.

சமாசாரங்கள்.

சூதுவிளையாடினவர்கள் பிடிபட்டது செம்மாதெருவில் சூது விளையாடின பதினறுபேர்களுக்கு இம்மாதம் உகூ-ந் தேதி யாழ்ப்பாணம் பொலிசுநீதிபதி யவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ரு0-ரூபா அல்லது ஒருமாசமறியல் தெண்டம விதித்தனர்

கைக்கூலிவாங்கியவர்—இலங்கை வனபரிபாலனபகுதித் தலைமைக்கிளார்க்காயிருந்தவர் கைக்கூலிவாங்கினதின் நிமித்தமாக கரு00 ரூபா அபராதமும் எட்டுமாசமறியலும் விதிக்கப்பட்டார்

மூன்றுமாச மறியல்—கண்டிக்சுப்பிரீங்கோட்டிலே பொய்ச்சாட்சிசொன்னவொருவனுக்கு மூன்றுமாசமறியல் விதிக்கப்பட்டது

தேயிலை யனுப்புதல்—இலங்கைத்தேயிலைத்தோட்ட ஐரோப்பியர் தற்போது நடக்கும் யுத்தத்திலுள்ள ஆங்கிலயுத்தவீரர்களின் பாவிப்புக்காகப் பத்திலட்சம் இறுத்தல்தேயிலை அனுப்பியிருக்கிறார்கள்

கஅ ௵மறியல்—அநுராதபுரம் ஏசன்றர் மெஸ் கொனஸ்றனரையின் துரைஅவர்கள் தமது கந்தோரில் எழுதிக்கொண்டிருக்கும்போது அவருக்குப் பின்னூர்சென்று அவரைக்கோடரியால் மோசஞ்செய்யத்துணிந்த இரத்தினமுனி யென்னும் புத்தகுருவுக்குக் கண்டிச்சுப்பிறீங்கோட்டிலே மேற்படிமறியல் விதிக்கப்பட்டது.

புத்தகவரவு—வண்ணையம்பதியிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் குருநாதசுவாமிமீது ஷை யூர் வாசரும் சைவாபிமானியுமான ஸ்ரீ க. வைத்திலிங்கபிள்ளை அவர்களாலியற்றப்பட்ட திருவூஞ்சல், லாலி, எச்சரிக்கை, மங்களம் ஆதியன அடங்கியுள்ள ஒருபிரதி நமக்குக் கிடைத்தது. பாக்கள் ஒவ்வொன்றும் ஆக்கியோனின் கல்வித்திறமையை நன்கு விளக்குவனவாயிருக்கின்றன. நமக்கனுப்பியபிரதிக்காக ஸ்துதி கூறுகின்றேம்.

பத்திரிகைகளுக்கு கஷ்டம்—இப்போது ஐரோப்பாவில் நடைபெற்று வரும் யுத்தம் நீடிக்குமாயின், காகிதங்கள் கிடைப்பது கஷ்டமாமென்று அனேக பத்திராதிபர் பயந்திருக்கின்றனர் இதுகாரணமாக இந்தியன் டெய்லி நியூஸ் என்னும் பத்திரிகை தனது ௰ பக்கத்தோடு வெளியாகாது, ௬ பக்கத்தோடு வெளியாய்வருகின்றது; அவ்வாறே சென்னையிலுள்ள பத்திரிகைகளுள் சில வெளியாகின்றன பர்மாவிலும் இவ்வாறு ஒருபத்திரிகை வெளிப்பட்டு வருகின்றது

கடிதங்கள்.

[கடிதகாரர் அபிப்பிராயங்கட்குப் பத்திராதிபர் உத்தரவாதி யல்லர்]

வண்ணைவைத்தீசர்ஒருதுறைக் கோவையுரை.

(:*:)

அனமூர் தெறழிய மாவியம் மாதுடனானும், இனமூர் தருவி பதிவரி யாகவன்னை யேந்திலமுயிர, சினமூர்ந்த நிபகனைக் காத்தட் செறித்தநின்றீர், மனமூர்ந்த நீரின நீரவித் தாலெவர் வாங்குவரே.

இ—ள். ஆணன் உடன் அம் மாதும்-வேதங்களுக்குரிய பிரமாவோடு அந்த விட்டுணுமூர்த்தியும்; மூர்த்த அனம் எறழியும் ஆதி-மூர்க்கமலத்தில் முறைபே அன்னவடிவத்தையும் பன்றிவடிவத்தையும் கொண்டு; [illegible] தருவி-இன்றளவுந்தேடி; அறிவரியான வண்ணை ஏந்து இறைமிர்-அறிதற்கரிய வைத்தியநாதப்பெருமானார் வீற்றிருக்கும் வண்ணைமாநகரையொப்பாகவுள்ள வக்கிய ஆரணாகளையுடைய பெண்ணே; சினமூர்ந்த நிபகவை காத்துள் செறித்து நின்றீர்-நீர் கோபம் மூற்பட்ட நிமையாகிய நஞ்சினுக்கு ஒப்பமைந்த கண்களைக் கைகளினுள்ளாக அடக்கி மறைத்து நிற்கின்றீர்; மனம் உந்து நீர் இளநீர் அளித்தால்-கண்டோர்மனத்தை வென்று தங்கும் நீர்மையையுடைய செவ்விளநீர் போன்ற தனங்களைப் புலப்படத் தந்தால்; எவர் வாங்குவர்—யாவர் மனமுவந்து பெற்றுக் கொள்வார். எ—று. ஏ அசை. அகரம் பண்டறிசுட்டு. அனமென்பதில் இடைபோற்றும் என்னுமையையும் விகாரத்தாற்றொக்கன. இன்னமொழற்பாலது இனமென நின்றது. அளித்தாள் அளித்தால் வினையெச்சம். ஆதி தருவி அறிவரியான் வண்ணையென வியையும், மனமூர்ந்த நீர் என்பதற்கு, இன்பத்துக்குரிய மனத்தால் மூற்பட்ட நீரென் றுரைப்பினுமமையும். தலைவன் பலமுறை அடுத்து விளித்துரைத்தலால் தலைவி நாணமுடையாள் போன்று கைகளான் மறைத்த கண்களையும், மறையாது புலப்படவிட்ட தனங்களையும் கெவும் இளநீருமென வுரைத்தலால், இது இசைபுருவகாலங்காரம், கடு.

அக்கனி கொன்றை பராப்புனைச் தோறுகலம் பகத்தான், மக்களை யீந்தவன் வாமம்பிகை பங்கன் வண்ணையன்னீர், இக்கினையென்ற ரசமா தளங்கனி யிக்கிருக்க, மிக்கசெம் மாவடு மூடிவைத் தீரிது வெள்ளிதே.

இ—ள். அக்கு அனிகொன்றை அரா புனைந்தோன்-என்புமாலையையும் சர்ப்பத்தையும் அணிந்தருளினவரும்; நுதல் அம்பகத்தால் மதனை ஈந்தவன்-திருநுதல் நெற்றிக்கண்ணினாலே இருக்குமாரனைத் தந்தருளினவரும்; வாமம் பிகை பங்கன்—தையலாகிய அம்மையாரைப் பங்காக வாமபாகத்தில் உடையவருமாகிய வைத்தியநாதப்பெருமானது; வண்ணை அன்னீர்-வண்ணைமாநகரை நிகர்த்த பெண்ணே; இக்கினை வென்ற ரசமாதளங்கனி இங்கு இருக்க-மதுரத்தாற் கரும்பை வென்ற இனிமையையுடைய மாதளங்கனிக்கொப்பான தனங்க ளிவ்விடத்தே வெளிப்படாக இருப்ப, மிக்க செம் மாவடு மூடிவைத்தீர்-மிகுதியான செவ்விய மாவடுவை யொப்பாகித்த கண்களைமறைத்துக் கொள்ளுகின்றீர்; இது வெள் அறிவே-இவ்வாறு நிற்றல் உமது அறிவில்லாதகுணமே. எ—று. ஈற்றேகாரம் தேற்றம். அக்குகொன்றை அரா என்பன செவ்வெண்ணின்தொகை தொக்குநின்றது. புனைந்தோன் ஈந்தவன் வாமம்பிகைபங்கன் என்பன ஒருவனையே நோக்குநின்ற ஏதுப்பெயர்கள். இன சாரியை. ரசம் வடசொல். கனி வடு தொகுதியொருமை, இனிமைச் சுவைமிக்க பொருள்களைவற்றினும் மேலான கருமையையும் இனைப் சுவையால் வென்ற மாதளங்கனியே தலைவியின் தனங்களுக்கு முற்றுவமையாக இயைந்தன வென்பார். தனங்களை இக்கினை வென்ற ரசமாதளங்கனி என்றார். இது இயைபுருவகத்தோடு வேற்றுமை அலங்காரம். கசு.

இங்ஙனம்:
தி. கிருஷ்ணபிள்ளை உபாத்தியாயர்.

பிரமஸ்ரீ ப. சிவசர்மா அவர்களால் இயற்றப்பட்ட ஞானக்கருப்பொருள்விளக்க வினா?

(o)

சர்மாவே!

கள்ளிறைத்திடும் தண்டார்க் கடம்பனிகாளைபன்னாட், பிள்ளைமைத்தொழில் மேற்கொண்டு பெட்புடனொழுகும்வண்ணம், வள்ளியைத்தன்பால் வைத்து வள்ளிவெற்பென் னூரம, முள்ளவக்கிரியின் மேன்மை யுரைத்திடுமளவிற்றுமோ.

இச்செய்யுளானும் நீயெழுதிய முகவுரைப்பாகத்தானும் நம்மாற்குறிக்கப்பட்ட நூலார்த்தமே திருமணசரிதையின் மெய்ப்பொருளாமென்பதான்றவிளங்குகின்றது. மெய்ப்பொருளொன்றிருக்கப் பொய்ப்பொருளொன்றுகாட்டுவது எதன்பொருட்டு? பதிபசுபாசவிலக்கணங்களை யுணராத மந்தமதிகளைத் தெருட்டி நன்னெறிகட் செலுத்தும்" பாகம்யாது? அவ்வகையாது?

'பதிபோககாமிகளுக்குப்போகமனுபவிக்கச் செய்யுமாற்றை யுணர்த்துதலாவது... ....நடித்துக்காட்டுதல்" என்றீர். இறைவன் சத்தமுனிவர்களையும் மலையரசனிடம் விடுத்து மணம்பேசுவித்து மணமியற்றிக்கொண்டதன்மை போகமனுபவிக்கச்செய்யுமாற்றை யுணர்த்துதலா? பிறிதா? உணர்த்துதலேயெனின் அதில் நம்மாற்குறிக்கப்பட்ட இவ்விலக்கணம் வியாபிக்கின்றதா? வியாபியாவழி அவ்வியாத்தியாகாதா? காண்டல் கருதல உரையென்னுந் திரிவித அளவைகளுள் எவ்வளவைக்கொண்டு இவ்விலக்கணம் உரைக்கப்பட்டது? உரையளவைகொண்டெனின் அதனை எடுத்துக்காட்டுக? கருதலளவைகொண்டெனின் பிறபொருட்டனுமானமாக்கிக் காட்டுக.

"வள்ளியம்மை திருமணஞானக் கருப்பொருள்விளக்கம்" என்னுந்தொடர்மொழிப்பெயரை உற்றுநோக்குங்கால் அது வள்ளியம்மைதிருமணமும் ஞானக்கருப்பொருள்விளக்கமும் எனஉம்மைதொக்க இருபெயர்த்தொடராய்நின்று வள்ளியம்மைதிருமணப்படலமூலத்தையும் அதற்கு நும்மால் எழுதப்பட்ட உரையையுங் குறிக்கின்றதா? அல்லது ஒருபெயராய்நின்று ஒருநூலையுணர்த்துகின்றதா? நூலையேயுணர்த்துமென்றுசெனின் அஃதியாது? அதுகத்தியமா? பத்தியமா? கலவையா?

இவ்வினாக்களுக்கு நியாயமானவிடைகொடுத்து மந்தமதிகள் சந்தேகத்தைநிவிர்த்தி செய்வது சர்மாவின்கடனே. அங்ஙனம் நிவிர்த்திசெய்வாராயின் மேலும் இவ்விதசில வினாக்கள் எழும்.

வி. தக்ஷிணமூர்த்தி (மீசாலை)

ஆசாரம்.

(0)

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்."

என்னும் உத்தரவேதத் திருக்குறளானும் இதனுரையானும் வேதாதிகாரம் இருபிறப்பாளர் மூவருக்குமுடைத்தாயினும் அந்தணரே அதிற்றலைமையுடையரென்பதும், ஏனை நான்காம் வருணத்தினராகிய சூத்திரருக்கும் பிறருக்கும் அத்தலைமை இல்லையென்பதும், பெற்றாம். அற்றேல், "உயர்ந்தார்க்குலம்," என எடுத்தோத்தின்மையின் சூத்திரருக்கு வேதமோதுதற்கண் அதிகாரமின்மை யாதுபற்றியெனிற் கூறுவல் நாற்குலமும் ஒக்க உயர்ந்தனவே யெனினும், பிறப்புவகையானன்றி ஒழுக்கவகையான் ஒன்றற்கொன்று தாழ்வுயர்பு கூறப்படுமாகலின் அவ்வொழுக்கவகைபற்றி ஈண்டு அதிகாரமின்மை கூறப்படுமென்க. என்னை? பிராமணருக்கு வேதமோதுதலும் யாகம் செய்தலுமே சிறந்ததொழில், ஏனையவை அத்துணைச் சிறப்புடையவல்ல. அரசருக்கு தனுர்வேதம் அருத்தவேதம் முதலியகலைகளை ஓதுதலுடன் செங்கோனடாத்துதலே சிறந்ததொழில்; ஏனையவத்துணைச் சிறப்புடையவல்ல வணிகருக்கு வாணிகஞ்செய்தலும் பசுக்காத்தலுமே சிறந்ததொழில்; ஏனைய வத்துணைச் சிறப்புடையவல்ல. சூத்திரருக்குஉழுதுபயிரிடுதலும் உபகாரஞ்செய்தலுமே சிறந்ததொழில்; ஏனையவத்துணைச் சிறப்புடையவல்ல. அற்றேல், 'ஒத்தபிறப்பினராகிய மக்களுள்" எனப் பரிமேலழகர் கூறியவாறு நீவிருங்கூறுகின்றீர், அங்ஙனங் கூறுநீவிர் நாற்பாகுப்பாடாகிய தொழிலைவேறு கூறுமாறென்னையெனின்? அறியாது கடாயினும்; அங்ஙனம் நாற்கூறுசெய்து தொழிலவேறு கற்பித்ததியாவனென்று; உலகநடக்கைநோக்கி மநுவேலங்கர் கற்பித்தனராகலின் என்க. அங்ஙனமாயின் முன்பிறவென்றது யாதையெனின் நாற்குலத்தினின்றும் பிறழ்ந்து தோன்றிய அநுலோம முதலாயினமையென்க. அற்றேல் அநுலோமர் முதலாயினோர் பிறப்புவகையான் வேறுபடுதலின் பிறப்பொப்புமை கூறுதலடாதெனின், அற்றன்று: அவர் வேறுபடுதற்கு மூலகாரணம் அவர் தந்தைதாயர் ஒழுக்கப்பிறழ்ச்சியேயாகலின் என்க. அஃதொக்குமன்னுயினும், பிரமதேவருடைய முகமுதலிய நால்வகை அங்கங்களினின்றும் நாற்குலமும் உதித்தனவென ஓதுபவாகலின், 'பிறப்புவகையானன்றி ஒழுக்கவகையா' லுயர்விழிவு கூறுதலமையாதெனின் அறியாது கூறினுய்; கடவுளுடைய அங்கமெல்லாம் அருளே யாகலின் அருளாகிய ஒருபொருளிற் றோன்றிய ஒருசாதிப்பொருளுக்கு வேறுபாடு கற்பித்தலறிபாமையின் அலகீதயாகலின் என்க. "பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையால்" என உத்தரவேத போதத்தையும், நாற்குலத்துள் ஒவ்வொரு குலத்திலுள்ளுமு நாற்குல போதலையும உற்றுநோக்கியுணர்க. அன்றியும, நான்காம் வருணத்தினராகிய சூத்திரர் மேலிருந்து கூறப்பணித்து இழிந்து பிரமமுனிவராகிய நைமிசாரணியவாசிகள் புராணங்கேட்பத் தமக்கு எழுந்து மரியாதை செய்யவில்லையென்று முனிந்து யோகிய பலராமரைப் பிரமகத்தி பிடித்தவரலாற்றையுமோர்ந்துணர்க. அற்றேல் சூத்திரருக்கு வேதாதிகாரத்தை நீக்கிய ஒழுக்கங்காலயாதெனில்? உழுதுண்வாழ்க்கையராகலின் அவருழவுதொழிலே நீக்கியதென்க, வேதம மறைமொழியாகலின், ஒருகாலிருகாலோதியவழி யமையாது பலகாலோதல் வேண்டும்; அங்ஙனமோதுதற்குப் பயிரிடுமாந்தருக்குக் காலமமையாதென்க, அற்றாகலினன்றே ஒதல்வேட்டலாதி பொழுக்கந்தவறுமென்றஞ்சி அந்தணர் "கலத்திற்சேறல்கடனன்றென" விலக்கியதூஉம், இடையிடின்றி வேதமோதற் சிறப்புப்பற்றி அவரை 'வேதமாந்தரென நூல்களெடுத்தோதியதூஉமென்க. 'மறப்பினுமோத்துக்கொளலாகும்பார்ப்பான், பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்" என்பவாகலின் விதித்தவோதல்வேட்டலாதி பொழுக்கத்தை நீக்கி, விலக்கியகலத்திற் சேறன்முதலிய வொழுக்கத்தை பற்றிப்போர் அந்தணருமாகார், அவரைச் சூத்திராதிகளில் வரிந்ததுமாகவென்க. எல்லார்க்கு மொழுக்கஞ் சிறந்தவினமே 'பெருமைக்குமேனைச் சிறுமைக்குந் தத்தம், கருமமே கட்டளைக்கல்" எனஉத்தரவேதமெடுத்தோதிற்றென்க. (வரும்)

இங்ஙனம்
வி. தம்பிப்பிள்ளை. மீசாலை.

அடைவு நகை விற்பனவு விளம்பரம்.

௧௮௯௯-ம்ஆண்டின் எட்டாமிலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவுபிடிக்கும் வண்கிழக்கு வை. சண்முகப்பிள்ளை யிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போதவணைதப்பி மேற்படிசட்டத்தின் ௧௨-ம பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

நம்பர்	ரூ. ச	அடைவுவைத்தவரின்பெயர் ஊரும்	நகைகளின் விபரம்
1630	6 ...4	ப. பொன்னம்பலம்	திருநெல்வேலி மூக்குத்தி 1
2362	14...4	வை; சட்டநாதர்	வண்கிழக்கு பின்கோர்க்கி 1
2464	10... ,	வே. சுப்பிரமணியம்	திருநெல்வேலி வயிரவாளிசோடி 1
2652	35... ,	சு. செல்லையா	நல்லூர் சங்கிலி 1
3004	10 54	மு. சினித்தம்பி	வண்கிழக்கு மோதிரம் 2 ,
3037	15 ... ;	க. வைத்தியலிங்கம்	நல்லூர் பாதசரம்சோடி 1 சங்கிலிசோடி 1 பிலாக்கு 1 பதக்கம் 1
3060	6 ... ,	இ. வல்லிபுரம்	வண்கிழக்கு காதோலைசோடி 1
8069	15 ... '	ப. கந்தையா	வண்கிழக்கு காதுப்பூ சோடி 1
3121	10 ... ,	க. கணபதிபபிள்ளை	மானிப்பாய் பதக்கம் 1
3135	20 ... '	மு. கணபதிப்பிள்ளை	வண்கிழக்கு ஒட்டுவளையல் 8
3140	18 ... '	மு. சினித்தம்பி	வண்கிழக்கு மோதிரம் 3
3187	10 ... ,	க. நாகலிங்கம்	வண்கிழக்கு கம்பியட்டியல்
3246	12 ... '	இ. சினி	வண்கிழக்கு கற்காதோலைசோடி 1
3304	8 ... '	நா. இராமலிங்கம்	வண்கிழக்கு பின்கோர்க்கி 1
3312	12 ... '	ம. பொன்னம்பலம்	வண்கிழக்கு அரும்புமணிக்கோர்வை 1
3434	07 ... '	சு. நன்னித்தம்பி	திருநெல்வேலி குவளைக்கடுக்கன்சோடி 1
3488	35 ... '	வி. வல்லிபுரம்	வண்கிழக்கு சறட்டட்டியல் 1
3502	6 ... '	இ. பொன்னையா	நல்லூர் காட்டுக்கடுக்கன்சோடி 1
3508	6 ... '	ப. செல்லையா	கோப்பாய் சிமிக்கிவாளிசோடி 1
3540	6 ... '	இ. அப்பாக்குட்டி வண்கிழக்	வண்கிழக்கு சிமிக்கிவாளிசோடி 1
3617	7 ... '	க. கணபதிப்பிள்ளை	மானிப்பாய் மணியட்டியல 1
3687	15 ... '	பொ. குழந்தைவேல்	மறவன்புலோ கற்காதோலைசோடி 1
3696	10 ... '	வே நாகப்பர்	நல்லூர் தாயித்து 1 அரைஞாண் 1
3848	11 64	வே. பொன்னம்பலம்	வண்கிழக்குகடுக்கன்சோடி2 வாளிசோடி1
3895	15 ... '	மூ. சங்கரம்	நல்லூர் சறடு 1
4022	30 ... '	வி. க. வேதநாயகம்	வண்மேற்கு கம்பியட்டியல் 1
4060	30 ... '	ப. சு. முத்துமதுமீராசாய்பு	வண்மேற்கு கல்வாளிசோடி 1
4119	15 ... '	கா. பாறுபதி	வண்கிழக்கு காதோலைசோடி 1
4131	25 ... '	ஆ. நாகலிங்கம்	ஆரியகுளம் கற்காதோலைசோடி 1
4160	6 ... '	பொ. நல்லதம்பி	வண்கிழக்கு காட்டுக்கடுக்கன் சோடி 1
4163	30 ... '	நா. கனகசபை	வண்கிழக்கு கற்காதோலைசோடி 1
4209	20 ... '	இ. அப்புத்துரை	வண்கிழக்கு சறட்டட்டியல் 1
4230	80 ... '	சி. கந்தையன்	ஆரியகுளம் காப்புசோடி 1அட்டியல் 2
4269	7 ... '	இ. செல்லர்	வண்கிழக்கு தெட்சணாமந்திரம் 1
4280	7 ... '	சு. நன்னித்தம்பி	திருநெல்வேலி பாதசரம்சோடி 1 (காசு 2
4348	'0 ... ,	ப. சின்னையா	நலலூர் மணிக்கோ1 அரைஞா1 பிரான்சக
4372	25 ... ;	வை நாகலிங்கம்	வண்கிழக்கு கற்குச்சிசோடி 5 சிமிக்கிவாளிசோடி 1
4393	6 ... '	வ. தங்கம்	,,

விற்பனவு 1914-ம்ஆண்டு செப்டெம்பர் மீ 5ந் உ திகதிக்குச்சரியான ஆநந்த வருஷ ஆவணி மீ உ௰ சனிக்கிழமை பகல் பத்துமணியளவில் மேற்படிபிள்ளையவர்கள்வீட்டில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

வெந்திஸ் மேஸ்த்தர் அ. கு செல்லையா, உடையார்

விளம்பரங்கள்.

அசாதிரோகங்களுக்கும் பிரதிக்ஷ ஔஷதம்.

கஸ்தூரித் திராவகம்.

இந்தத்திராவகத்தில் ஒருநேரத்துக்கு மூன்றுசொட்டுவீதம்ஒருஒயின்கிளாஸ் தண்ணீரில்விட்டு காலை, மாலை இரவுபடுக்கும்நேரம் சாப்பிட்டால் எப்பேர்ப்பட்ட நீரழிவினால் தாங்கமுடியாத வருத்தத்தை மூன்றுநாளையில் சுகமாக்கும். ௪0 நாள் மருந்துசாப்பிட்டால் வியாதிநன்றாய்ச் சொஸ்தமாகும். தருணவயசுடையவர்கட்கு இதுமிகவும் சேர்த்தியானதிராவகம். இதன்விலை அவுன்சுக்கு ரூபா 10. இதற்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. தபாற்செலவு பிரத்தியேகம்.

துஜஸ்பங்க தைலம்.

இதன்சிறந்தகுணத்தை இங்குவிரிப்பின் மிகுமாகு மாதலால் என்னிடத்தில் நேரிலாவது கடிதமூலமாயாவது விபரமறிந்துகொள்ளவும். ஒரு அவுன்ச தைலத்தின் விலை ரூபா ௨. தபாற்செலவு பிரத்தியேகம்.

வீரியஸ்தம்பனக் குளிகை.

ஆச்சரியம்! மிக்க ஆச்சரியம்!! ரோகமற்றவர்களுக்கு ஒருகுளிகையில்தெரியும். இதைப்பற்றி அதிகமாகச் சொல்லத்தேவையில்லை. ௨ குளிகைக்குக்குறைய அனுப்பப்படமாட்டா. பரீட்சித்தவர்களே இதன்சுகத்தை அனுபவிப்பார்கள். ௧0. குளிகையின்விலை ரூபா ௨. தபாற்செலவு அணா ௪. இதன்குணத்தையும் என்னிடத்தில் காயிதமூலமாயாவது நேரிலாவது விபரமறிந்துகொள்ளவும்

—கெந்தாதரதைலம்—பக்க வாய்வுக்குக் கைகண்ட உண்மையான மருந்து இதன்விலை ஒரு அவுன்சுக்கு ரூபா ௫.

—மகாநாராயண தைலம்—வாய்வுகள் சபாபீனிசம் முதலானதுக்கு கைகண்டது. ஒருஅவுன்சுக்கு ரூபா ௧. மேற்கண்ட மருந்துகளுக்குத் தபாற்செலவு பிரத்தியேகம்.

காமவிலாசலேகியம அல்லது சாலாமிஸ்ரிலேகியம.

இந்தலேகியத்தை யான் அநேகபிரபுக்களுக்குச்செய்துகொடுத்துப் பலவியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள்மனமகிழ்ந்து வெகுமதிகளையுங்கொடுத்திருக்கிறார்கள். இதைநான் விளம்பரத்தில் லோக நன்மைக்காக பிரகசித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் நன்மை சுகம் முதலியவைகளை அடையும்படி பொதுஜனநலத்தைக்கருதியே இப்பொழுதே இந்த லேகியத்தைப்பற்றிப் பிரகசித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி குங்குமப்பூ சிலாஜித் கஸ்தூரி குமஸ்தகா பீதாறு சாலாமுஸ்லி சப்பேதுமுஸ்லி பிஸ்தாஸ் சாரப்பருப்பு பாதம்பருப்புசாதாவாரி சீர்முன்ளிவிதைநாகப்பூ வங்கபஸ்பம் அபரகபஸ்பம்பவளபஸ்பம் வெள்ளிபஸ்பம் அயகாந்தசெந்தூரம் சாம்பிராணிப்பதங்கம் இன்னுமநேக புஸ்டியான மூலிவகைகள் சேர்த்துச்செய்யப்பட்டிருக்கிறது: இதனால் நீரழிவு வெள்ளை நீர்மாவு சுண்ணும்பு கரைத்ததுபோல் வெள்ளையாய்ப்போகுதல் நீர்க்கடுப்பு நீரடைப்பு மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு இருமல் காசம் பித்தகாமாலை பித்தபாண்டு பீனிசம் கைகால் காந்தலி இடுப்புவலி பக்கவாய்வு சூலவாய்வு இன்னும் அனேகவிதமையான வியாதிகள்தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் சூதகவாய்வு பிரசவ அறையில் உண்டாகும் பலநோய்கள் நீங்கி தேக புஷ்டியையும் பலத்தையும் தரும் பாலைவிருத்திசெய்யும்.

சிலர் குறணம் லேகியங்களால் சகலநோயுந் தீர்த்து ௮0 வயதுள்ள முதியோரை யௌவனர்களாக்குமென்றும் சந்தான மில்லாதஸ்திரிகள் கர்ப்பணியாவார்களென்றும் பலவாறு வீணானகாரியங்களைப் பிதற்றித்திரிகிறார்கள். அவ்விதம்பிதற்றவும் பொய்சொல்லவும் என்மனச்சாட்சி எனக்கு இடங்கொடுக்கிறதில்லை- ஆனால் கர்ப்பந்தரிப்பதற்குத்தகுந்த அவிஷதம்என்னிடமுண்டு. இஷ்டமுள்ளவர்கள் ஆதியோடந்தமாய் அப்பேர்ப்பட்ட ஸ்திரிகளின் தேகக்குணத்தை தெரிவித்து ஔஷதத்திற்கு வேண்டிய பணமுஞ் செலவளிப்பார்களாயில் நான் ஔஷதப்பிரயோகஞ் செய்யக்கூடும். இதைப்புருஷர்கள் பெரிய களாச்சிக்காய்ப்பிரமாணமும் ஸ்திரீகள் சிறியகளாச்சிக்காய்ப்பிரமாணமும் புதிய வியாதிகளுக்கு ௨௧ நாளும் பழையவியாதிகளுக்கு ௪௧—நாளும அந்தந்தவியாதிகளுக்கு மருந்து எடுக்கப்படும்போது நம்மால் தெரிவிக்கப்படுமனுபானத்துடன் சாப்பிடவேண்டும் விலை இருத்தலொன்றுக்கு ரூபா ௨0கால் றாத்தலுக்குக்குறைந்து அனுப்பப்படமாட்டாது. புருஷர்களுக்கு ௪0 நாளைக்கு ஒரு றாத்தல்போதுமானது. ஸ்திரீகட்கு முக்கால் றாத்தல் இதுசாப்பிடுவதற்கு வெகு இன்பமும் குணமுமாயிருக்கும். இதில்லாதிசிரியேயிடையாது. எடுக்க இஷ்டமுள்ளவர்கள் வியாதியின்விபரத்தைக் கடிதமூலமாய்த் தெரிவித்து அத்துடன் ௮ அணா ஸ்டாம்பும் அனுப்பவேண்டியது. அல்லாவிட்டால் லேகியம் அனுப்பப்படமாட்டாது.

மிருத்துசிவண அல்லது கஸ்தூரி மாத்திரை.

எட்டுவிதமான சுரத்திற்கும் அசுத்தசலத்தினால் கொசுகு முதலான விஷசெந்துக்களினு லுண்டாகும் மலேரியா ஆகிய விஷக்காச்சல்களுக்கும் பலவிதமான சன்னிக்கும் இதில் ஒரு மாத்திரையை இஞ்சிஞ்சிச்சாற்றி லுரைத்துச் சாப்பிட்டால எப்பேர்ப்பட்டசன்னியும ஒரு அல்லது இருவேளை மருந்திற்சுகப்படும். ஏழுவேளை சாப்பிட்டால் சன்னி காச்சல் சுரம் முதலியன சுத்தமாய் சுகமாகும் ௧௨-குளிகையின் விலை ரூபா ௨.

காமனீமது பஞ்சனீ மாத்திரை.

இதுதங்கம் அப்ரகபஸ்பம் கஸ்தூரி குங்குமப்பூ லிங்கசெந்தூரம் முதலியவிலையுயர்ந்தமருந்துகள் சேர்த்துச்செய்யப்பட்டுத் தயாராயிருக்கின்றது. இதன்சொற்பகுணத்தை மட்டுமகாட்டுகிறேன். நீரளிவுகாசம் இருமல் ஈழைதிராதவைதரோகம்பிரமேகம்மூலச்சூடு புகிராய்க்காலும் பக்க வாதம் வெள்ளை முதலியவியாதிகள்தீர்ந்து தாதுபுஷ்டி யுண்டாகும் மூன்று நாளில் சுகலக்ஷணம் தெரியும் ௪௧ நாளில் வியாதி பூரணசுகமாகும். காலைமாலை ௪௧—நாட் சாப்பிடக்கூடிய ௮௨-மாத்திரைகளின்விலை ரூபா ௫. [illegible] சாப்பிடக்கூடிய ௮-மாத்திரைகள் ரூபா ௧-௮-௦ கொடுக்கப்படும். தபாற்செலவு பிரத்தியேகம்.

சந்திரிகா பிரமேக மாத்திரை.

இந்தமாத்திரை காசம் பவுத்திரம் பக்கவாய்வு பித்தபாண்டு வெள்ளை நீர்க்கடுப்பு நீரடைப்பு பீனசபாலம் [illegible] வியாதிகளா லுண்டான நோய்களை யெல்லாம் நீக்கும் இம்மாத்திரையை ௨௧-நாள் சாப்பிட்டால் பூரணசுகமுண்டாகும். மருந்தெடுக்கும்போது வியாதிக்கேற்ற அனுபானந் தெரிவிப்போம். ௪௨-குளிகையின் விலை ரூபா மூன்றரை.

புத்தகங்கள்.

பின்னுற காட்டப்படும் அருமையான புத்தகங்கள் மாணவர் எவரும் இகபர நன்மையைக்கருதி அவைகளைக் கைப்பற்றிக்கொள்ள [illegible] யிருந்தால் இவ்விஷயங்களுக்கும் குருவைப்போல் போதிக்ககூடிய மெத்த அருமையான புத்தகங்களானதால் ஒவ்வொருவரும் இவைகளைக் கட்டாயம் வாங்கி வாசிக்கவேண்டியது.

௧ கோகசாஸ்திரம் மாபிள்கட்டு ஒருபிரதி ரூபா ௩.
௨ „ கலிகோகட்டு „ ௪
௩ கைத்தொழிற்போதினி மாபிள்கட்டு
௧௫. கலிக்கோ „ ரூபா ௨.
௪. பூலோகௌஷததோபகாரி [illegible] கைகண்டமுறை பதார்த்தகுணசிந்தாமணி ஒன்று அணா ௮0.
௫ அநேக இங்கிலீஷ் சாமான்கள் [illegible] ஒன்பதாஞ் சஞ்சிகை ஒன்றுக்கு அணா ௧௨.
௬ நோசனலால சரித்திரம்ஒன்றுக்கு அணா ௮
௭ சிப்பு சாப்பு சரித்திரம் அணா ௧௨.
௮ மேற்படிசரித்திரமும் நோசனலால்சரித்திரமும் ஒரேகட்டிட மொன்றுக்கு அணா ௨0
௯ ருசிய யப்பானியயுத்தம்இருபகுதிகள் ௩௪.
௧0 சேமணிசெய்யும்புத்தகம்(அபகக) ரூ ௩௫.

மேற்காட்டிய புத்தகங்கள் வேண்டுவோர்கள் தமதுபெயர் விலாசங்களைத் தரவோடு அனுப்பப்படும் தபாலில் வேண்டுவோர்க்குத் தபாற்செலவு பிரத்தியேகம், மற்றவிபரங்கட்கு கார்ட்டெழுதிக் கேட்டறிந்துப்பார்க்கவும். இனிமாக அனுப்பலாம் ஒருமுறை இப்பொருட்களை வாங்கி தினமுமகிழ்வை யடையுங்கள்.

எமதுவிலாசம
மகாராஜ கெங்காபிரசாத் பண்டிதர்
மருந்தாண்ட முதலாமடிவிசன் நம்பர்- 98
கொழும்பு.

பலத்தைக்கொடுக்கும் மருந்துகளில்
பழனி ஆர். எம். கே.

தங்கமாத்திரை.

இது ஒன்றுதான திவ்ய ஔஷதம்.
ஆச்சரியமான குணம்!
மிக்க இன்பமான சுகம்!!

தேசபுஷ்டிக்கு இதுசிகரற்றமருந்து! இதைகுறிகரானமருந்து ஒன்றுமில்லை- ஒரேகுளிகையில பரீக்ஷைபார்க்கலாம் பலவீனம் சக்திக்குறைவு முதலியவைகளை நீக்கும், நரம்புகளைப் பலப்படுத்தி தேகநிறத்து வலவைக்கொடுக்கும். அதிகவயதாலும் பலஹீனத்தாலும் நேரிட்ட சகலவித சோர்வு சக்திகுறைவு, பலஹீனம், ரத்தக்குறைவு முதலிய வைகளை நீக்கித் தேகக்கட்டை உறுதிப்படுத்தி, ரத்தத்தைக்கொடுத்து தாதுபுஷ்டியை உண்டாக்குவதில் இதற்குமிஞ்சின அவுஷதமில்லை பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதம் 60 பில்ஸ் ரூபா 10. 24, பில்ஸ்ரூபா 4. மாதிரிக்கு 12-பில்ஸ் ரூபா 2. 6-பில்ஸ் ரூபா I.

10 ரூபாவுக்கு எழுதினால் மிக இன்பமானவாசனையுடைய கூந்தல தைலம் I-ரூபா விலையுள்ள புட்டி 1-ம் 5-ரூபாவுக்கு டை அரைப்புட்டி 1-ம் இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்

பற்பொடி.

பொறுக்கமுடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும் பல் அசைவு, பல் ஆட்டம், ஈறுவீக்கம், வலி, பல்புழுக்குடைச்சல், இரத்தம் வடிதல், வாய்நாற்றம், பல்கூச்சம் இவைகளை உடனே நீக்கும் இதைவிடாது பல்துலக்கிவந்தால் கண்டிப்பாய்ப் பல்லைக் கெட்டிப்படுத்தி ஆயுள்பரியந்தம் சந்தோஷ அனுகூலமாகும் புட்டி அணா ௪ ௩-புட்டி அணா ௧௧ ௬-புட்டி ௧-௨-0 சார்ஜ் ௫-அணா. ௧-டஜன் ரூபா ௨-௪-0, சார்ஜ் இனாம்

ஆர். எம். கே. வேலுசாமி,
பழனி.

விளம்பரம்.

டைனமைற் வெடி.

என்னிடத்தில்திறமான சுழு சமார்க்குபோட்டடைனமெற்வெடிவிலை சிறுக்கிறது. திருப்பமுள்ளவர்கள் என்னி[illegible] விலை விபரமுதலியவற்றை அறிந்துகொள்ளவும்.

இங்ஙனம்
த. சின்னத்தம்பி
டைனமெற்வெடி வியாபாரி
திருநெல்வேலி கிழக்கு
யாழ்ப்பாணம்.

பரிசுத்தமான தேன்.

நாடுகளிலிருந்து ஸ்பெஷலாய் எங்களால் நியமிக்கப்பட்ட வேலைக்காரர்களால் சேகரிக்கப்பட்டது. கடைகளில் விற்கும் வெல்லப்பாகை கலந்த தண்ணீர் போன்ற தேனல்ல. இத்தேன் மிகவும் தடிப்பாகவும், திக்காகவும், சுத்தமாகவும் இருக்கும். கலப்பில்லாத அப்பட்டமான சரக்கு. மேலும் வைத்திய சாஸ்திர முறைப்படிக்கு எங்களால் சுத்தியும் செய்யப்பட்டு விற்கப்படுகிறது கடைகளில் விற்கும் தேன் ஒருசேர்சேர்க்குமிடத்தில் எம்மால் விற்கப்படும் தேன் ௪ துளிகள் உபயோகித்தால் போதுமானது. இப்படிப்பட்ட மேலானவும், சுத்தமானவும், சுயமானவும் சரக்கு கிடைப்பது அரிது. மருந்துகளை இத்தேனுடன் அனுபானித்து உட்கொண்டால் மருந்துகளின் வீரியமும், குணமும் அதிகரிக்கச்செய்யும்.

விலை டின் ௧-க்கு அணா ௧௨. ஒன்று அல்லது இரண்டுடின்கள் வரையில் அனுப்ப வி. பி செலவு அணா ௫ பிரத்தியேகம்.

பி. சுப்பராய்,
ஆயுர்வேத அவுஷதசாலை,
தஞ்சாவூர்.

தயவுசெய்து,
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு
வாசிக்கக்காண்பியுங்கள்.

P. சுப்ராயின்
அபூர்வ ஆயுர்வேதஔஷதங்கள்

காலரா என்னும் வாந்தி பேதிக்கு மருந்து—இக்கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம். டப்பா ௧-க்கு ரூபா ௧, வி. பி. செலவு ௧, முதல் ௬-டப்பாக்கள்வரையில் அணா ௫ பிரத்தியேகம்.

மலபந்த நிவாரணி—மலஜலக்கட்டு, அக்கினிமாந்தம், வாயுவு, குடல் புரட்டல். மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம், செரியாமை; புளித்த யேப்பம் தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா ௧-க்கு விலை அணா ௧0. வி. பி ௧, அல்லது ௨-டப்பாக்கள்வரையில் அணா ௫ பிரத்தியேகம்.

சந்திரா மிருதரஸம்—அசாத்தியமான காசம், இருமல், க்ஷயம் முதலிய நுரையீரலைப் பற்றிய வியாதிகளைக் குணப்படுத்தும். நல்லபசியும், தேகபலமும் உண்டாக்கும். டப்பா ௧-க்கு ரூபா ௧, வி. பி செலவு ௧, முதல் ௬ டப்பாக்கள்வரையில் அணா ௫ பிரத்தியேகம்.

சீதபேதி ரத்தபேதிக்கு மருந்து—எத்தனை நாட்பட்டதானாலும் இம்மருந்தினால் வயிற்றுக்கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, கிராணி, வயிற்றுக்கடுப்பு முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா ௧-க்கு விலை ரூபா ௧. வி. பி. செலவு ௧, முதல் ௬ டப்பாக்கள்வரையில் அணா ௫ பிரத்தியேகம்.

விஷனுதிலா—எப்பேர்க்கொத்த தலைவலிக்கும் நெற்றியின் இரண்டுபொட்டுக்களிலும் இம்மருந்துகொஞ்சம்தடவி நன்றாகத் தேய்க்கவேண்டும். இடுப்புநோய், கழுத்துநோய், பக்கசூலை, கைகால் பிடிப்பு முதலியவும், இன்னும் தேகத்தில் காணும் மற்றுமுள்ள சகலவலிகளுக்கும் இம்மருந்தில் கொஞ்சமெடுத்து நோயுள்ள இடத்தில் நன்றாகத் தேய்க்கச் சுகமாகும். தேள், நட்டுவாக்களி பூரான் இதுகள் கொட்டின அல்லது கடித்த விடத்தில் இம்மருந்தைத் தடவி நன்றாய்த் தேய்த்தால் சௌக்கியமாகும். சீசா ௧-க்கு அணா ௮, வி. பி. செலவு ௧,-முதல் ௬ சீசாக்கள் வரையில் அணா ௫ பிரத்தியேகம்.

நாக்குப்பூச்சி மருந்து—குடலிலுள்ள எல்லாவித கிருமிகளையும் வெளியாக்கி, நாக்குப்பூச்சிகளாலுண்டாகும் எல்லாவித பாதைகளையும் நிவாரணம் செய்யும். தேகாரோக்கியத்தையும் தரும். நாக்குப்பூச்சிகள் குடலிலிருந்தால், அடிவயிற்றில் கனம், பசியின்மை. அபரிமிதமான பசியைப்போலத் தோற்றல், சாப்பிட்டபின் வயிற்றுநோவு, வயிற்றுப்போக்கு, வாய்நாற்றம், வாந்தி, வெருட்டல், சுரம், தலைவலி, மூக்கிலும் ஆசனத்திலும் அரிப்பு, வாயில் உமிழ்நீர் ஊறல், நாக்கு இழுத்துக்கொள்ளல், சிலசமயம் மலக்கழிச்சல் முதலிய பற்பல நோய்கள் நாக்குப்பூச்சிகளா லுண்டாவதை இம்மருந்து முற்றிலும் குணமாக்கும். விலை சீசா ௧-க்கு அணா ௧0, ௧, முதல் ௧௨ சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணா ௫ பிரத்தியேகம்.

ஓமம் வாட்டர்—இது சாதாரணமாய் கடைகளில் பெரியசீசாக்களில் விற்கப்படும் ஓமம்வாட்டரல்ல. எம்மால் தயார்செய்த டை ஓமம்வாட்டர் ௧, அவுன்ஸ் சீசாக்களில் விற்கப்படுகிறது. இதை துளிகள் கணக்காகவே உபயோகித்தால் போதுமானது. இச் சிறு சீசாவி லுள்ளதை ௨௪ அவுன்ஸ் சுத்த ஜலத்துடன் கலந்துகொண்டால், கடைகளில் விற்கும் ஓமம்வாட்டரை விட சிறந்த ஓமம்வாட்டரைத் தரும். வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி. அக்கினிமாந்தம்; அஜீர்ணபேதி இவைகளுக்குக்கொடுத்தால் சௌக்கியமாகும். ஜீரணசக்தியை அதிகரிக்கும், காலரா என்னும் வாந்தி பேதி நோகத்திற்கு இதைக் கொடுத்து தகுந்த குணத்தைக் கண்டதுண்டு. விலை சீசா ௧-க்கு அணா ௮, வி, பி. செலவு ௧, முதல் ௬ சீசாக்கள்வரையில் அணா ௫ பிரத்தியேகம்,

நரைமயிர் கறுக்கச் சாயம்—இதன் சீசாவுடன் சுற்றியிருக்கும் டைரக்ஷனில்க்கண்டபடி உபயோகித்தால் நரைத்தமயிரும், செம்மட்டைமயிரும், நரைப்பதற்குமுன்னிருந்த கறுப்பு நிறத்தையும், பளபளப்பையும் அடையும். இதை உபயோகித்தால் முகலட்சணமும் வசீகரமு முண்டாவது மன்றியும் கிழவர்களை வாலிபர்களைப்போல் தோற்றச்செய்யும். விலை சீசா ௧-க்கு ரூபா ௧. ௧, முதல் ௬ சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணா ௫ பிரத்தியேகம்,

லக்ஷ்மீவிலாசதைலம்—மிகவும் வாசனையுள்ளதைலம். தலைமயிர், கண்புருவம், மீசை, தாடி மெத்தச் செழிப்பாகவும், கறுப்பாகவும், நெருக்கமாகவும் வளரச்செய்யும். இதன் இன்பமான சுகந்தம் இத்தைலத்தை உபயோகிக்கிறவர்களை சுற்றிக்கொண்டே வாசனை வெகுநேரமிருக்கும். மூளைக்கொதிப்பைப்போக்கி, சித்தபிரமை, தலைமயக்கம், புத்திமந்தம், நித்திரையில்லாமை முதலியதுகளைப் போக்கும். விலை சீசா ௧-க்கு அணா ௧௨. ௧, அல்லது ௨ சீசாக்கள்வரையில் அனுப்ப வி. பி. செலவுகள் அணா ௫ பிரத்தியேகம்.

லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்தவஸ்து. தந்தநோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாயு இதுகளை நீக்கும் தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்டபின் ௨ மாத்திரை உபயோகித்தால் எப்போக்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அநேகமணிநேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டுமாத்திரை சாப்பிட்டால் நீடித்த அக்கினிமாந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினா லுண்டாகும் வயிற்றிழிவு, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்ட நாடாது. ஜன்னியில்க் கொடுக்க ஜன்னி நீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைக்கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்துச்சாமான்களும் வாசனைத் திரவியங்களும் சேர்த்து செய்யப்பட் டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக்கற்பூரம் முதலிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்க வேண்டியது அவசியம். அரை குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்கும் சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி ௧, முதல் ௪ மாத்திரைகள் வரையில வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச் சுகமாகும். சீசா ௧-க்கு விலை அணா ௪. இந்தியாவில் ௧, முதல் ௧௨ சீசாக்கள் வரையில அனுப்ப பாக்கிங், தபால்சார்ச அணா ௫-ம் சிலோனுக்கு அணா ௭-ம பிரத்தியேகம.

அதி உன்னத வாசனைத் திரவியங்கள் முதலானவைகளின் விலை விபர ஜாபிதா.

உயர்ந்த கேசரோசனை தோலா ௧-க்கு ரூபா ௮, உயர்ந்த பச்சைக்கற்பூரம் தோலா ௧-க்கு ரூபா ௨, உயர்ந்த குங்குமப்பூ தோலா ௧-க்கு ரூபா ௨.

உசிதமான அத்தர் தினுசுகள்—ரோஜாப்பூ, மல்லிகைப்பூ, ஜாதிப்பூ, மகிழம்பூ, மருதாணிப்பூ, வினாமிச்சம்வேர், மருக்கொழுந்து, சவாக் முதலிய புஷ்பங்களின் முதல்த்தரமான அத்தர் வகைக்கு தோலா ௧-க்கு கிரயம் ரூபா ௧—௮—0 வி. பி. செலவு பிரத்தியேகம்.

சோடா வாடர் பவுடர்—இச் சூர்ணத்தில் கொஞ்சமெடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்து கொண்டால் அதி உசிதமான சுயமான சோடா வாட்டர் உண்டாகும். ஒரு சீசாவிலுள்ள பவுடர் சுமார் ௮ சீசா சோடாவாட்டர் செய்யப்போதுமானது. விலை சீசா ௧-க்கு அணா ௬ வி பி. செலவு ௧, முதல் ௪ சீசாக்கள் வரையில் அணா ௫ பிரத்தியேகம்.

தாம்பூல விஹாரம்—தாம்பூலம் தரிப்பவர்களுக்கு அதி அவசியமான மணக்கவிப்புண்டாக்கக்கூடிய வாசனைக்கலவை. விலை டப்பா ௧-க்கு அணா ௪, வி. பி. செலவு ௧, முதல் ௧௨ டப்பாக்கள் வரையில் அணா ௫ பிரத்தியேகம்,

லெமனெட் பவுடர்—இச் சூரணத்தில் கொஞ்சம் எடுத்து குளிர்ந்த ஜலத்துடன் கலந்தால் அதிஉத்தமமான லெமனெட் தயாராகிவிடும். ஒரு சீசாவிலுள்ள சூர்ணம் சுமார் ௮ பெரிய சீசா லெமனெட் செய்யப்போதுமானது. விலை சீசா ௧-க்கு அணா ௬, வி. பி. செலவு ௧ முதல் ௪ சீசாக்கள் வரையில் அணா ௫ பிரத்தியேகம.

பன்னீர்—இப் பன்னீர் அரை அவுன்ச சீசாவில் விற்கப்படுகிறது. இச்சிறு சீசாவிலுள்ள பன்னீரை மூன்று பெரிய சீசா வெந்நீருடன் கலந்தால் முதல்த்தரமான மூன்றுசீசா பன்னீராகும், மேன்மையான பன்னீர் விலை சீசா ௧-க்கு அணா ௮, வி. பி, செலவு ௧, முதல் ௬ சீசாக்கள் வரையில் அணா ௫ பிரத்தியேகம.

(குறிப்பு.) இந்த இடங்களில் மலையாளம் தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவு செய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற்குறித்த விலாசத்துக்கு விவரமாகவும் தெளிவாகவும் எழுதிப் பெற்றுக் கொள்ளக் கோருகிறேன்.

P. சுப்பராய்
ஆயுர்வேத அவுஷதசாலை
ஸ்ரீவெங்கடேசபெருமாள்
கோவில் சன்னதி.
தஞ்சாவூர்

ஆறிரு தடந்தோள்வாழ்க அறுமுகம் வாழ்கவெற்பைக், கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்கச்செவ்வேள், ஏறியமஞ்ஞைவாழ்கயானைதன்னணங்குவாழ்க, மாறிலாவள்ளிவாழ்க வாழ்கசீரடியரெல்லாம்.

☞ Printed and published by M. S. Manicam pillai for the proprietor at the Sree VaiaMpehyvilasa press Jaffna,